

முதலமைச்சர் தளபதியார் அவர்களின் நல்வாழ்த்துக்களுடன் திருக்கோவிலூர் சட்டமன்ற தொகுதி, திருக்கோவிலூர் நகரத்தில் 'உங்களுடன் ஸ்டாலின்' சிறப்பு முகாமை கழக உயர்நிலை செயல் திட்டக்குழு உறுப்பினர் முன்னாள் அமைச்சர் முனைவர் க.பொன்முடி எம்.எல்.ஏ. துவக்கி வைத்து பர்வையிட்டார். உடன் மாவட்ட ஆட்சியர் பிரசாந்த், மாவட்ட துணைச் செயலாளர் நகர மன்ற தலைவர் டி.என்.முருகன், மாவட்ட ஊராட்சி குழு துணை தலைவர் மு.தங்கம், நகர செயலாளர் கோபிகிருஷ்ணன், தலைமைச் செயற்குழு உறுப்பினர் டி.செல்வராஜ், ஒன்றிய செயலாளர்கள் அ.சா.ஏ.பிரபு, பி.வி.ஆர்.சு.விசுவநாதன், பேரூராட்சி தலைவர் எஸ்.அன்பு, நகர மன்ற துணை தலைவர் உமாமகேஸ்வரி குணா, மற்றும் அரசு அதிகாரிகள், கழக நிர்வாகிகள் உடனிருந்தனர் .

### முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவித்தபடி

# இன்று தமிழ்நாடு நாள் விழா! : சென்னையில் நடைபெறுகிறது!

## அமைச்சர் மு.பெ.சாமிநாதன் – போட்டியில் வென்றவர்களுக்குப் பரிசுகள் வழங்குகிறார்!

*சென்னை, ஜூலை 18-*

தாய்த் தமிழ்நாட்டிற்கு தமிழ்நாடு எனப் பேரறிஞர் அண்ணா பெயர் சூட்டிய ஜூலை 18ஆம் நாளினை தமிழ்நாடு நாளாக இனிக் கொண்டாடப்படும் என நேற்று தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் 30.10.2021 அன்று அறிவிக்கப்பட்டவாறு இன்று (18.07.2025 வெள்ளிக்கிழமை), சென்னை, திருவாவடுதுறை டி.என். ராஜரத்தினம் அரங்கம், முத்தமிழ்ப் பேரவையில் தமிழ்நாடு நாள் விழா கொண்டாடப்படவுள்ளது.

தாய்த் தமிழ்நாட்டிற்கு தமிழ்நாடு எனப் பேரறிஞர் அண்ணா அவர்கள் பெயர் சூட்டிய ஜூலை 18ஆம் நாளினை தமிழ்நாடு நாளாக இனிக் கொண்டாடப்படும் என முதலமைச்சர் அவர்களால் 31.10.2021ஆம் நாளன்று அறிவிக்கப்பட்டு தொடர்ந்து கொண்டாடப்பட்டு வருகிறது.

அதன்படி இவ்வாண்டு தமிழ்நாடு நாள் விழா 18.07.2025 அன்று சென்னை, திருவாவடுதுறை டி.என். ராஜரத்தினம் அரங்கம், முத்தமிழ்ப் பேரவை மன்றத்தில் நடைபெறவுள்ளது. இவ்விழாவில் தமிழ் வளர்ச்சித் துறை இயக்குநர் முனைவர் ஔவை அருள் வரவேற்புரையும், தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை செயலாளர் வே. ராஜாராமன், முன்னிலையுரையும் ஆற்றுகின்றனர்.

அதனைத் தொடர்ந்து மரு.ஜெ. இராஜமூர்த்தி தலைமையில் கருத்தரங்கம் நடைபெறவுள்ளது. "பேரறிஞர் அண்ணாவும் தமிழும்" என்ற தலைப்பில் வழக்கறிஞர் த. இராமலிங்கம் "இன்பத் தமிழுக்கு நாளும் செய்வோம் நல்ல தொண்டு" என்ற தலைப்பில் கலைமாமணி திருமதி தேச மங்கையர்க்கரசி "இமய நெற்றியில் எழுதுக தமிழ்நாடு" என்ற தலைப்பில் கவிஞர் நெல்லை ஜெயந்தா "தமிழ்நாடு என்றால் தனியின்பம் தானே" என்ற தலைப்பில் திருமதி ரேகா மணி கருத்துரையாற்றுகின்றனர்.

திருமதி தமிழச்சி தங்க பாண்டியன் எம்.பி. மயிலை த.வேலு எம்.எல்.ஏ. ஆகியோர் வாழ்த்துரை வழங்குகின்றனர்.

அமைச்சர் மு.பெ சாமிநாதன் தமிழ்நாடு நாள் விழாவை முன்னிட்டு மாநில அளவில் கட்டுரைப் போட்டியில் முதல் பரிசு பெற்ற நாமக்கல் மாவட்டம் மா. அப்ரின் என்ற மாணவிக்கு ரூ.50,000/க்கான காசோலை, பாராட்டுச் சான்றிதழும் இரண்டாம் பரிசு பெற்ற திருப்பத்தூர் மாவட்டம் கி.க. ஜெயஸ்ரீ என்ற மாணவிக்கு ரூ.30, 000/ க்கான காசோலை, பாராட்டுச் சான்றிதழும் மூன்றாம் பரிசு பெற்ற கள்ளக்குறிச்சி மாவட்டம் இ. மேகதர்ஷினி என்ற மாணவிக்கு ரூ.20,000/க்கான காசோலை, பாராட்டுச் சான்றிதழும் பேச்சுப் போட்டியில் முதல் பரிசு பெற்ற நாமக்கல் மாவட்டம் பெ. ஜீவகனி என்ற மாணவனுக்கு ரூ.50,000/க்கான காசோலை, பாராட்டுச் சான்றிதழும் இரண்டாம் பரிசு பெற்ற திண்டுக்கல் மாவட்டம் இர. முத்து மீனாட்சி என்ற மாணவிக்கு ரூ.30,000/க்கான காசோலை, பாராட்டுச் சான்றிதழும் மூன்றாம் பரிசு பெற்ற திருநெல்வேலி மாவட்டம் ல. ஹரிஹர சுதன் என்ற மாணவனுக்கு ரூ.20,000/ க்கான காசோலை, பாராட்டுச் சான்றிதழும் வழங்கியும் அகவை முதிர்ந்த தமிழறிஞர்கள் 100 பேருக்கு நிதியுதவி ஒப்பளிப்பு அரசாணை வழங்கி விழாப் பேருரையாற்றுகிறார்.

தமிழ் வளர்ச்சித் துணை இயக்குநர் திருமதி கு.ப. சத்தியபிரியா நன்றி கூறுகிறார்.

### செஞ்சி ஒன்றியம் – ஆலம்பூண்டியில்

# "உங்களுடன் ஸ்டாலின்" திட்ட முகாம்!

## மாவட்டப் பொறுப்பாளர் செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ. தொடங்கி வைத்தார் - செஞ்சி ஒன்றியப் பெருந்தலைவர் விஜயகுமார் தலைமை!

*செஞ்சி, ஜூலை 18-*

செஞ்சி ஒன்றியம் ஆலம் பூண்டியில் "உங்களுடன் ஸ்டாலின் "திட்ட முகாமை முன்னாள் அமைச்சர் செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ. தொடங்கி வைத்தார்.செஞ்சி ஒன்றிய பெருந்தலைவர் விஜயகுமார் தலைமை தாங்கினார்.

விழுப்புரம் மாவட்டத்தில் 'உங்களுடன் ஸ்டாலின்' திட்டம் முதற்கட்டமாக 15ஆம் தேதி முதல் ஆகஸ்ட் 14ஆம் தேதி வரை நகர்ப்புற பகுதிகளில் 21 முகாம்களும், ஊரகப்பகுதிகளில் 81 முகாம்கள் உட்பட 102 முகாம்கள் நடைபெற உள்ளது. நகர்புற பகுதிகளில் 13 அரசு துறைகளைச் சார்ந்த 43 சேவைகளும், ஊரகப் பகுதிகளில் 15 துறைகளை சேர்ந்த 46 சேவைகள் வழங்கப்படுகிறது.

அந்த வகையில் தமிழ் நாடு அரசின் சேவைகள் பொதுமக்களை விரைவாகவும், எளிதாகவும் சென்று சேர்ந்திடும் வகையில் செயல்படுத்தப்பட்டுள்ள 'உங்களுடன் ஸ்டாலின்" திட்ட முகாம்சிதம்பரத்தில் முதலமைச்சர் தொடங்கி வைத்துள்ளார்.

இதையடுத்து விழுப்புரம் மாவட்டம் செஞ்சி ஒன்றியம் ஆலம் பூண்டி ஊராட்சியில் உங்களுடன் ஸ்டாலின் திட்டம் முகாம் தொடங்கப்பட்டது.

ஒன்றிய பெருந்தலைவர் விஜயகுமார் தலைமை தாங்கினார்.

விழுப்புரம் மாவட்ட ஊராட்சி செயலாளர் பூ. நடராஜன் அனைவரையும் வரவேற்றார் நிகழ்ச்சியில்முன்னாள் அமைச்சர் செஞ்சி மஸ்தான் எம். எல்.ஏ. கலந்துகொண்டு உங்களுடன் ஸ்டாலின் திட்டத்தினை தொடங்கி வைத்து பொதுமக்களிடமிருந்து வரப்பெற்ற கோரிக்கை மனுக்களைப் பெற்று கணினி மூலம் பதிவு செய்வதற்கு அவர் அறிவுறுத்தினார்.தொடர்ந்துமுகாமில் பெறப்பட்ட மனுக்களுக்கு உடனடியாக தீர்வு காணப்பட்டு பயனாளிகளுக்கு உத்தரவினை அவர் வழங்கினார்.

முன்னதாக உங்களுடன் ஸ்டாலின் திட்ட முகாமில்அனைத்து துறை சார்பில்பொதுமக்களிடமிருந்து வரப்பெற்ற கோரிக்கை மனுக்கள் குறித்து முன்னாள் அமைச்சர் செஞ்சி மஸ்தான் எம். எல்.ஏ. நேரில் சென்று பார்வையிட்டு பொது மக்களிடம் இருந்து வரப்பெற்ற கோரிக்கை மனுக்கள் குறித்து கேட்டறிந்தார்.

அப்போது முகாமிற்கு வருகை தந்த வயதான மகளிர் இடம் முன்னாள் அமைச்சர் செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ. குறைகளை கேட்டறிந்தார்.

அப்போது சர்க்கரை நோய், ரத்த அழுத்தம் இருப்பதால் அவருக்கு தொடர்ந்து மருந்து மாத்திரை வழங்குவதற்கு மருத்துவரிடம் அறிவுறுத்தினார். மேலும் தமிழ்நாடு முதலமைச்சர் உங்கள் வீடுகளுக்கே தேடி சென்று மருந்து மாத்திரை கொடுக்க உத்தரவிட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

நிகழ்ச்சியில் மாவட்ட கவுன்சிலர்கள் அரங்க ஏழுமலை, அகிலா பார்த்திபன், ஒன்றிய கவுன்சிலர் கேமல், வட்டார வளர்ச்சி அலுவலர்கள் நடராஜன், பிரபா சங்கர், ஊராட்சிமன்ற தலைவர் முத்தம்மாள் சேகர் உள்ளிட்டோர்கலந்து கொண்டனர்.

செஞ்சி வட்டாட்சியர் துரைச்செல்வன் அனைவருக்கும் நன்றி கூறினார்.



மதுரை மாவட்டம் மதுரை மாநகராட்சி மண்டலம் 1க்குட்பட்ட ஆனையூர் வார்டு அலுவலகத்தில் உங்களுடன் ஸ்டாலின் திட்ட முகாமினை வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி தொடங்கி வைத்து துறை சார்ந்த அரங்குகளில் மனுக்கள் பதிவு செய்வதை பார்வையிட்டு மனுதாரர்களுடன் கலந்துரையாடினார். உடன் மதுரை மாவட்ட ஆட்சித் தலைவர் பிரவீன் குமார், மேயர் இந்திராணி பொன்வசந்த், கழக நிர்வாகிகள் மருதுபாண்டியன், கலை கார்த்திகேயன், செல்வகணபதி, பாபு, முருகேசன், நவநீதகிருஷ்ணன், கொடிவைரவன், இளைஞர் அணி மருதுராஜா உள்ளிட்ட கழக நிர்வாகிகள், அதிகாரிகள் திரளான பொதுமக்கள் பங்கேற்றனர்.

### மயிலாடுதுறையில் - விடுதலைப் போராட்ட

# தியாகி நாகப்பப் படையாட்சியாருக்கு சிலை!

## முதல்வருக்கு பொன்குமார் நன்றி – பாராட்டு!

*சென்னை, ஜூலை 18-*

காந்தியடிகளுக்கு இந்திய விடுதலை போராட்டத்தில் ஊக்கமளித்த தியாகி நாகப்பப் படையாட்சியாருக்கு மயிலாடுதுறையில் முழு உருவ வெண்கல சிலை அறிவித்து முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்குப் பொன்குமார் பாராட்டு தெரிவித்துள்ளார்.



அவரது அறிக்கை வருமாறு:-

இந்திய விடுதலைப் போராட்டத்திற்கு காந்தியடிகளுக்கு ஊக்கமளித்த மயிலாடுதுறை தியாகி நாகப்பப் படையாட்சியார் அவர்களுக்கு மயிலாடுதுறையில் முழு திருவுருவ சிலை நிறுவப்படும் என்று அறிவித்துள்ள முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு நெஞ்சார்ந்த நன்றியை தெரிவித்துக் கொள்கிறோம்.

இந்திய விடுதலைக்குக் காரணமான சத்தியாக்கிரகப் போராட்டத்தை காந்தியடிகள் வடிவமைத்து அதை முதன் முதலில் செயல்படுத்தியது தென்னாப்பிரிக்கா நாட்டில் தான். காந்தியடிகள் தென்னாப்பிரிக்காவில் நடத்திய சத்தியாக்கிரகப் போராட்டத்தில் முதலில் களப் பலியானவர் நாகப்பன் படையாட்சி ஆவார்.

மயிலாடுதுறை மாவட்டம், மேலப்பெரும்பள்ளம் கிராமத்தில் சாமிகண்ணு படையாட்சி கனகம்மாள் தம்பதியருக்கு மகனாக பிறந்த நாகப்பன் படையாட்சி, 1850 ஆம் ஆண்டு வாக்கில் தன் பெற்றோருடன் தொழிலுக்காக தென்னாப்பிரிக்கா சென்றார்.

தென்னாப்பிக்காவில் அதிகாரத்தில் இருந்த ஆங்கிலேயே வெள்ளையர்கள் அந்த நாட்டின் பூர்வீக குடி மக்களான கருப்பினத்தவரையும் அங்கு குடியேறிய இந்தியர்களையும் இரண்டாந்தர குடி மக்களாக நடத்தி வந்தார்கள்.

ஒவ்வொரு இந்தியரும் தங்களுடைய அங்க அடையாளங்களையும் கை ரேகைகளையும் பதிவு செய்ய வேண்டும், இந்தியத் தொழிலாளர்கள் தென்னாப்பிரிக்காவில் பணிபுரிய 25 பவுண்டு வரி செலுத்திட வேண்டும் என்பன போன்ற பல கடும் சட்டங்கள் போடப்பட்டன.

வழக்கறிஞர் தொழிலுக்காக தென்னாப்பிரிக்கா சென்றிருந்த காந்தி அவர்கள் இந்தியர்கள் மீது வெள்ளையர்கள் தொடுத்த இந்தத் தாக்குதலை எதிர்த்து போராடி வந்தார்.

இந்த சமயத்தில் நாகப்பன் அவர்களது நண்பரான திருவாரூர் பாலசுந்தரத்தை அவரது ஆங்கிலேயே முதலாளி தாக்கி, இரண்டு பற்களை உடைத்து விட்டார். இதனை அறிந்து நாகப்பன் பாலசுந்தரத்தை காந்தியிடம் அழைத்துச் சென்றார். அந்த முரட்டு ஆங்கிலேயருக்கு எதிராக காந்தி நீதிமன்றத்தில் வழக்குத் தொடுத்தார். இந்த வழக்கிற்கு முக்கிய சாட்சியாக நாகப்பன் இருந்தார். இந்த வழக்கு வெற்றி பெற்றது. ஆங்கிலேயருக்கு எதிரான இந்த வழக்கின் வெற்றி தென்ஆப்பிரிக்காவில் இந்திய தொழிலாளர்களிடம் பெரும் புரட்சி ஏற்படுத்தியது. இந்த செய்தி இந்தியாவிலும் பரவியது.

இது இந்திய விடுதலைப் போராட்டத்திற்கு ஊக்கமளித்தது.

**சூடு பிடிக்கத் தொடங்கியது!**

மேற்படி கொடுமைகளுக்கு எதிராக காந்தியடிகள் தென்னாப்பிரிக்காவில் சத்தியாகிரக போராட்டத்தை ஆரம்பித்தார். இந்த போராட்டத்தில் அங்கிருந்த ஏராளமான தமிழர்களும் பங்கேற்றனர். போராட்ட களத்தில் முன்களவீரராக செயல்பட்ட 18 வயதான நாகப்பன் படையாட்சி 21.06.1909 அன்று கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டார். இந்த போராட்டத்தை கண்டு ஆங்கிலேயர்கள் அஞ்சினர். அதனால் இந்தியர்களுக்கு விதிக்கப்பட்டிருந்த 25 பவுண்டு வரி, மூன்று பவுண்டாக குறைக்கப்பட்டது. இதனால் இந்தியாவில் விடுதலை போராட்டம் எழுச்சி பெற்று சூடு பிடிக்கத் தொடங்கியது.

போராட்டக் களத்தில் நாகப்பன் தீவிரமாக இருந்ததால் தென்னாப்பிரிக்க நாட்டு அதிகாரிகள் சிறையில் அவரை மிகவும் கடுமையாக நடத்தினார்கள். இதனால் உடல் நலன் பாதிக்கப்பட்டது. வெளியில் வந்த நாகப்பன் உடல் நிலை மேலும் மோசம் அடைந்தது. 06.07.1909 அன்று இறந்து போனார்.

இது பற்றி காந்தியடிகள் தாம் நடத்தி வந்த 'இந்தியன் ஒபினியன்' என்ற பத்திரிக்கையில் நாகப்பனின் மரணம் சட்டப்படியான படுகொலை, அந்த வீர இளைஞன் இல்லாது போயிருந்தால் நமது சத்தியாகிரகப் போராட்டம் வெற்றிப் பாதையில் போயிருக்காது என்று எழுதினார்.

கடந்த ஆண்டு தியாகி நாகப்பப் படையாட்சியார் அவர்களின் நினைவு நாளான ஜூலை 6 ஆம் தேதி மயிலாடுதுறையில் சுமார் 2000 பேர் கலந்து கொண்ட பேரணி மூலம் மயிலாடுதுறையில் உள்ள அவரது சிறிய அளவிலான திருவுருவச் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்பட்டது. பின்னர் சமூகநீதி சத்திரியர் பேரவையின் சார்பில் நாகப்பப் படையாட்சியார் அவர்களின் புகழஞ்சலி கூட்டம் நடைபெற்றது. அந்த கூட்டத்தில் பல்வேறு தலைவர்கள் கலந்து கொண்டு நாகப்பப் படையாட்சியார் அவர்களின் புகழை பாடினர். அதில் பல்வேறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

குறிப்பாக காந்தியடிகளுக்கு இந்திய விடுதலை போராட்டத்தில் ஊக்கமளித்த தியாகி நாகப்பப் படையாட்சியாருக்கு மயிலாடுதுறையில் முழு உருவ வெண்கல சிலையை அமைத்திட வேண்டும் எனவும், மயிலாடுதுறை புதிய பேருந்து நிலையத்திற்கு நாகப்பப் படையாட்சியாருக்குபெயர் சூட்ட வேண்டும் எனவும், நாகப்பப் படையாட்சியாருடைய வரலாற்றை அடுத்த தலைமுறை அறிந்து கொள்ளும் வகையில் பள்ளி பாடப்புத்தகத்தில் அவருடைய வரலாறு இடம்பெற செய்திட வேண்டும் எனவும், தமிழ்நாடு அரசுக்கு கோரிக்கை வைத்து தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. பின்னர் முதல்வரை நேரில் சந்தித்து இந்த கோரிக்கைகளை வலியுறுத்தினோம்.

**பாராட்டுதலுக்கும் வரவேற்புக்குமுரியது!**

அதன் அடிப்படையில் இன்றைக்கு அவருக்கு முழு உருவ சிலை அமைக்கப்படும் என்று முதல்வர் அறிவித்துள்ளது பாராட்டுதலுக்கும், வரவேற்புக்கும் உரியதாகும். ஏற்கனவே கடலூரில் தியாகி அஞ்சலை அம்மாளுக்கு சிலை வைத்து அவருக்கு அரசு விழா எடுக்க முதல்வர் அறிவித்துள்ளார்.

இட ஒதுக்கீடு தியாகிகளுக்கு நினைவு மண்டபம், ஏ.கோவிந்த சாமி அவர்களுக்கு நினைவு மண்டபம் என தொடர்ந்து பல்வேறு அறிவிப்புகளை செய்து வரும் தமிழ்நாடு முதலமைச்சர் இப்போது நாகப்பப் படையாட்சி அவர்களுக்கு முழு உருவச் சிலை நிருவப்படும் என அறிவுறுத்தியுள்ளார். முதல்வருக்கு சமூகநீதி சத்திரியர் பேரவை நன்றியையும், பாராட்டுதலையும் தெரிவித்துக் கொள்கிறது.

இவ்வாறு பொன்குமார் தெரிவித்துள்ளார்.



திண்டுக்கல் மாவட்ட மாற்றுத்திறனாளிகளுக்கான சிறப்பு முகாம் பழனி எஸ்.கே.எம் திருமண மஹாலில் திண்டுக்கல் கிழக்கு மாவட்டச் செயலாளரும் பழனி சட்டமன்ற உறுப்பினருமான ஐ.பி. செந்தில்குமார் தலைமையில் நடைபெற்றது. உடன் திண்டுக்கல் மாவட்ட மாற்றுத்திறனாளி அலுவலர், பழனி ஒன்றிய கழக பொறுப்பாளர் சௌந்தரபாண்டியன், ராஜசேகர், பாலசமுத்திரம் பேரூர் கழக செயலாளர் காளிமுத்து, பழனி வட்டாட்சியர், துறை சார்ந்த அதிகாரிகள், கழக நிர்வாகிகள் உடன் இருந்தனர்.

### தி.மு.க. சுற்றுச்சூழல் அணி

# தருமபுரி கிழக்கு மாவட்ட துணைத் தலைவர் மற்றும் துணை அமைப்பாளர்கள் நியமனம்!

**சுற்றுச்சூழல் அணிச் செயலாளர் கார்த்திகேய சிவசேனாபதி அறிவிப்பு!**

தருமபுரி கிழக்கு மாவட்ட தி.மு.க. சுற்றுச்சூழல் அணி துணைத் தலைவர் எம்.நாகராஜன் மறைவெய்திய காரணத்தால் **முனைவர் வி.மலையமான், பி.எச்டி.,** (4/18, மாரியம்மன் கோவில் தெரு, சத்திரம் மேல வீதி, தருமபுரி - 636 701.) அவர்கள் மாவட்ட துணைத் தலைவராகவும் -, மாவட்ட துணை அமைப்பாளர்களாக நியமிக்கப்பட்ட கே.தீர்த்தராமன், ஜி.முருகன், சேட்டு (எ) பிரபாகரன் ஆகியோரை அவர்கள் வகித்து வந்த பொறுப்பிலிருந்து விடுவித்து, அவர்களுக்குப் பதிலாக கீழே குறிப்பிடப்பட்டுள்ளவர்கள் **தருமபுரி கிழக்கு மாவட்ட துணை அமைப்பாளர்களாக நியமிக்கப்படுகிறார்கள்.**

துணை அமைப்பாளர்கள் - ஆர்எம். வெற்றிவேல், 1/154, ராஜாகொல்லஅள்ளி, பி.அக்ரஹாரம் வழி, தருமபுரி - 636 813. எஸ்.பாரதிதாசன், 1, ஜடையன் வீதி, 7வது வார்டு, குப்பா தெரு, தருமபுரி - 636 701. எஸ். கார்த்திக் 5/144, நல்லாகவுண்டனஅள்ளி, சோகத்தூர் அஞ்சல், தருமபுரி வட்டம் - மாவட்டம்.

ஏற்கனவே நியமிக்கப்பட்ட மாவட்ட சுற்றுச்சூழல் அணி நிர்வாகிகளுடன் இவர்கள் இணைந்து பணியாற்றுவார்கள்.

| | |
|---|---|
| **"அண்ணா அறிவாலயம்"** | **கார்த்திகேய சிவசேனாபதி,** |
| நாள் : 16-07-2025. | செயலாளர், |
| சென்னை - 18. | தி.மு.க. சுற்றுச்சூழல் அணி |





விழுப்புரம் மாவட்டம் செஞ்சி ஒன்றியம் ஆலம்பூண்டி ஊராட்சியில் நடைபெற்ற 'உங்களுடன் ஸ்டாலின்' திட்ட முகாமை முன்னாள் அமைச்சர் செஞ்சிமஸ்தான் எம்.எல்.ஏ தொடங்கி வைத்து பொதுமக்களிடம் இருந்து வரப்பெற்ற பல்வேறு கோரிக்கை மனு குறித்து ஆய்வு மேற்கொண்டார். உடன் மாவட்ட ஊராட்சி செயலர் நடராஜன், செஞ்சி ஒன்றிய பெருந்தலைவர் விஜயகுமார்,வட்டாட்சியர் துரை செல்வன், வட்டார வளர்ச்சி அலுவலர்கள் நடராஜன், சீத்தாலட்சுமி உள்ளனர்.